**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.5/2024**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 08 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கோபி | மதம் | : இந்து |
| த/பெ | : சுப்பிரமணி | ஜாதி | : -- |
| வயது | : 42 | கிராமம் | : V.C.R. கண்டிகை |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**08.01.2026**
**<u>வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் வாதி ஏழுமலைக்கு சொத்தை விற்றதாக சொல்லியுள்ளதில் அது பூர்வீக சொத்தா சுய சம்பாதிய சொத்தா என்றால் பூர்வீக சொத்தாகும். என் அப்பாவின் அப்பா பெயர் ராமாஞ்சலு நாயுடு ஆகும். ராமாஞ்சலுவிற்கு உடன் பிறந்தவர்கள் யார் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. ராமாஞ்சலுவிற்கு கந்தேசலு என்பவர் உடன் பிறந்தவர் என்றால் சரிதான். ராமாஞ்சலு, கந்தேசலுவின் அப்பா பெயர் சின்னய்யா நாயுடு என்றால் சரிதான். சின்னய்யன், ராமாஞ்சலு, கந்தேசலு ஆகியோர்களுக்கு இந்த சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கந்தேசலுவின் மகன் பெயர்தான் செங்கல்வராயன் என்றாலும் செங்கல்வராயனின் மக்கள்தான் நாராயணன், நரசிம்மன் என்றாலும் சரிதான்.

2. செங்கல்வராயனின் தம்பிதான் சின்னய்யன் என்றால் சரிதான். செங்கல்வராயன், சின்னய்யனுக்கு ரங்கப்பன் என்ற சகோதரர் உள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. வழக்கு சொத்து பூர்வீக கூட்டு குடும்ப சொத்து என்றால் சரிதான். எங்களுக்குள் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என பத்திரம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. 2008ல் நாங்கள் வாதி ஏழுமலைக்கு விற்ற ஆவணத்தில் புல எண்.256/4, 254/1 ஆகிய 2 புல எண்களையும் குறிப்பிட்டுள்ளோம் என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 ஆவணம்தான் நாங்கள் கிரையம் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ 1ல் 5ம் பக்கத்தில் **"சின்னய்யன் வகையறா பாகம் பிரிக்கப்படாத நிலத்திற்கு வடக்கு"** என சொல்லியுள்ளோம் என்றால்

சரிதான். இதுவரை சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படவில்லை என்றாலும் நாங்களாகவே பத்திரம் எழுதிக்கொண்டோம் என்றால் பாகம் பிரிக்கப்படவில்லை ஆனால் அவரவர் தனித்தனியாக பயிர் செய்து அனுபவித்து வருகிறோம்.

3. 2023ல்தான் வழக்கு சொத்தை நிலஅளவையர் வந்து அளந்தார் என்றால் 2004ல் நாங்கள் அளந்து நானும் கஜேந்திரனும் பிரித்து கொண்டோம். 2023ல் வழக்கு சொத்தை நிலஅளவையர் வந்து அளந்தார் என்றால் ஆமாம். ஏழுமலை அழைத்து வந்து நிலஅளவையர் அளந்தார். அப்போதுதான் வரப்புபோட முயற்சி செய்தார் என்றால் அதற்கு முன்பே வரப்பு இருந்தது. அந்த வரப்பில்தான் நடந்து போய் கொண்டு இருந்தோம். அந்த வரப்பை கஜேந்திரன் மேற்கே தள்ள முயற்சித்ததில்தான் பிரச்சனை நடந்தது. நான் வாதி ஏழுமலையின் மருமகன் என்றால் சரிதான். பாகம் பிரிக்கப்படாத கூட்டு குடும்ப சொத்தில் அவரவராக அனுபவித்து வருகிறோம் என்றால் பத்திரமாக எழுதவில்லை. வாய்மொழியாக பேசிக்கொண்டு அவரவர் பிரித்து பயிர் செய்து வருகிறோம்.

4. நாங்கள் கிரையம் கொடுத்த வா.சா.ஆ 1 ஆவணத்திலேயே வாய்மொழியாக பிரித்து கொண்டதை சொல்லவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் என் மாமாவிற்கு தவறுதலாக விற்ற சொத்திற்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் திருமணத்திற்கு முன்பே நாங்கள் சொத்தை விற்றுவிட்டோம். வழக்கு சொத்திற்கு எங்கள் பெயரில் தனிப்பட்டா இருந்ததா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு கூட்டு பட்டா இருந்ததா என்றால் என் அப்பா பெயரில் இருந்தது. நாராயணன், நரசிம்மனின் பெரியப்பா பெயர் ரங்கப்பன் என்றால் சரிதான். ரங்கப்பன் மகன் பெயர் சுப்பிரமணி என்றால் சரிதான். அந்த சுப்பிரமணிதான் கஜேந்திரன் வகையறாவிற்கு சொத்தை விற்றுள்ளார்கள் என்றால் ஆமாம். அதுவும் கூட்டு குடும்பத்தில் உள்ள சொத்து என்றால் ஆமாம். என் மாமனார் தாக்கல் செய்த தவறான வழக்கிற்கு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)